## சிலிண்டருக்காக மக்களை தெருவில் நிற்கவைத்த ஒன்றிய அரசு!

# பா.ஜ.க.வின் 12 ஆண்டு கால ஆட்சி சுதந்திர இந்தியாவின் இருண்ட காலம்!

## மாநிலங்களவையில் டாக்டர் கனிமொழி என்.வி.என்.சோமு பேச்சு!

புதுடெல்லி, மார்ச் 20 –

மாநிலங்களவையில் தாக்கல் செய்யப்பட்ட செலவின மசோதா மீதான விவாதத்தில் கலந்துகொண்டு தி.மு.க. எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசியதாவது:

கடந்த 12 ஆண்டுகளாக பிரதமர் நரேந்திர மோடியின் தலைமையிலான இந்த பி.ஜே.பி. ஆட்சியில் சமூக ரீதியாக மக்களைப் பிளவுபடுத்தி, ஜனநாயகத்தை பலவீனப்படுத்தி, பொருளாதார சிக்கலுக்கு காரணமாகி இந்த நாட்டை பின்னோக்கி அழைத்துச் சென்றதன் மூலம் சுதந்திர இந்தியாவில் இந்த 2014–2026 காலகட்டத்தை நம் நாட்டின் இருண்ட காலம் என்று அழைக்கலாம். அந்தளவுக்கு சமூக நீதியை, ஜனநாயக மாண்புகளை, கூட்டாட்சித் தத்துவத்தை படுகொலை செய்திருக்கிறது இந்த அரசு.

மேற்கு ஆசியாவில் தற்போது நிலவும் போர் சூழல் காரணமாக உலக அளவில் எரிபொருள் மற்றும் எரிவாயு பற்றாக்குறை நிலவுகிறது. இந்தியாவும் இதில் தப்பவில்லை. ஈரான் மீது இஸ்ரேல் போர் தொடுக்கும் ஓரிரு நாட்களுக்கு முன்பாக நமது பிரதமர் இஸ்ரேலுக்குப் பயணமானதன் ரகசியம் என்ன? அதுபோல, நமது நட்பு நாடுகள் குறைந்த விலைக்கு எரிபொருள் தரத் தயாராக இருந்தும் அதிக விலை கொடுத்து அமெரிக்காவிடம் இருந்து எரிபொருளை வாங்குவதன் ரகசியம் என்ன?

பிரதமர் மோடியின் தவறான வெளியுறவுக் கொள்கைகளால் நமது நட்பு நாடுகள் கூட நம்மைவிட்டு விலகிச் சென்றதால்தான், இப்போது எரிபொருள் தட்டுப்பாட்டால் நம் நாடு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் முழுமையான தோல்விக்கு நான் ஐந்து காரணங்களை விளக்கிச் சொல்ல விரும்பிகிறேன்.



### தவறான விவசாயக் கொள்கைகள்!

முதலாவதாக, பணமதிப்பிழப்பு நடவடிக்கை மற்றும் அவசர கதியில் ஆபத்தான வகையில், பின் விளைவுகள் பற்றி யோசிக்காமல் அமல்படுத்தப்பட்ட ஜி.எஸ்.டி. வரி விதிப்பு முறை. சிறு வணிகர்கள் தங்கள் தொழிலை சுதந்திரமாகத் தொடர முடியாத அளவுக்கு இந்த இரண்டு நடவடிக்கைகளும் அவர்களை பாதித்தது. இதன் காரணமாக பொருளாதார வளர்ச்சியும் பாதிக்கப்பட்டது.

விவசாயிகளின் வருமானத்தை இரண்டு மடங்காக உயர்த்துவோம் என்று 2022ல் உரத்த குரலில் சொன்னது இந்த அரசு. ஆனால் இவர்களின் தவறான விவசாயக் கொள்கைகளால் விவசாயிகள் வீழ்ந்ததுதான் மிச்சம். குறைவான ஊதியம் மற்றும் விலைவாசி உயர்வால் கிராமப்புறங்களில் ஒரு நிரந்தரத் தேக்கநிலை உருவானதையும் யாரும் மறுக்க முடியாது.

இரண்டாவது, தன்னாட்சி பெற்ற அரசியல் சட்ட அமைப்புகளை மிரட்டி பலவீனப்படுத்தியது. சி.பி.ஐ., அமலாக்கத்துறை, நீதித்துறை போன்ற சுயமாக இயங்கக்கூடிய அமைப்புகளை தங்கள் அதிகாரத்தின் மூலமாக நேரடியாகவும் மறைமுகமாகவும் மிரட்டி, வளைத்து எதிர்க்கட்சித் தலைவர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகளை மேற்கொண்டது இந்த அரசு.

தவறு செய்ததாக இந்த அரசு யார் மீது குற்றம் சாட்டுகிறதோ அவர்கள் பி.ஜே.பி.யில் இணைந்துவிட்டால், அவர்கள் புனிதர்களாக மாறிவிடுவார்கள் என்ற கொள்கையை தங்களது 'வாஷிங் மெஷின்' டெக்னாலஜி மூலமாக அமல்படுத்தி வருகிறது இந்த அரசு. இது ஜனநாயகத்தை பலவந்தப்படுத்தும் செயல். அதே போல பின்னாளில் உச்சநீதிமன்றத்தால் ரத்து செய்யப்பட்ட தேர்தல் பத்திரம் என்ற பெயரில் மிகப்பெரும் மோசடியை அரங்கேற்றியதும் இந்த அரசுதான்.

### உளவுத்துறை தோல்வியால் உள்நாட்டுப் பாதுகாப்பு கேள்விக்குறி!

மூன்றாவதாக, தவறான வெளியுறவுக் கொள்கை மற்றும் பலவீனமான எல்லை நிர்வாகம். லடாக் போன்ற பகுதிகளில் நமது எல்லைகளை திறம்படப் பாதுகாக்க இந்த அரசு தவறிவிட்டது என்பதை பல நிபுணர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இதனால் சீனாவுடனான உறவு பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த அரசின் தவறான வெளியுறவுக் கொள்கைகளால் நமது அண்டை நாடுகளான நேபாளம், இலங்கை, மியான்மர், மாலத்தீவு மற்றும் வங்க தேசத்தில் நமது ஆளுமையை நாம் இழந்திருக்கிறோம். உளவுத்துறையின் தோல்வியால் ஏற்பட்ட பஹல்காம் போன்ற சம்பவங்களால் நமது உள்நாட்டுப் பாதுகாப்பும் கேள்விக்குறியாகி இருக்கிறது.

நான்காவது, கோவிட் கால மேலாண்மையில் ஏற்பட்ட தோல்வி. 2021ல் கொரோனா இரண்டாவது அலையின்போது மருத்துவமனைகளில் போதிய அளவுக்கு ஆக்ஸிஜன் மற்றும் படுக்கை வசதிகள் இல்லாத அவலநிலையை அவ்வளவு எளிதில் நாம் மறக்க முடியாது.

ஏழ்மை, வேலை வாய்ப்பின்மை உள்ளிட்ட மிக முக்கியமான விஷயங்களில் இந்த அரசு வெளிப்படைத் தன்மையை கடைப்பிடிக்காமல், தவறான புள்ளிவிவரங்களைத் தந்து அல்லது சீலிட்ட கவரை நீதிமன்றத்தில் கொடுத்து பொதுமக்கள் பார்வையிலிருந்து அவற்றை மறைத்தது.

தங்களது தனிமனித இமேஜை காப்பாற்றுவதில் காட்டும் அக்கறையை பொதுமக்களை பாதிக்கும் விஷயங்களில் காட்டுவதில்லை என்று இந்த அரசின் முக்கிய பதவிகளில் உள்ளவர்கள் மீது விமர்சகர்கள் முன்வைக்கும் கருத்தும் கவனிக்கத்தக்கது.

### மதவாதக் கருத்துகளைத் திணிக்கும் பி.ஜே.பி.!

ஐந்தாவது, சமூகத்தை பிளப்பது, மதவாதக் கருத்துக்களைத் திணிப்பது, மத வன்முறையைத் தூண்டுவது. இந்த 12 ஆண்டுகால பி.ஜே.பி. ஆட்சிக் காலத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக குறிப்பாக கிறிஸ்தவர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு எதிராக திட்டமிட்ட குற்றங்கள் அதிகரித்து வருவதாக விமர்சகர்கள் குறிப்பிடுகிறார்கள்.

இந்த அரசின் தவறான கொள்கைகளை விமர்சிக்கும் சமூக செயல்பாட்டாளர்கள், பத்திரிகையாளர்கள் மற்றும் எதிர்க்கட்சியினர் மீது இந்த அரசு அடக்குமுறையைக் கையாள்வதாகவும் விமர்சனங்கள் உள்ளன. சட்டத்தை தங்கள் கையிலெடுத்துக்கொண்டு சந்தேகப்படும் நபர்களின் வீடுகளை, சொத்துக்களை புல்டோஸர் வைத்து தரைமட்டமாக்கும் கலாச்சாரத்தை பி.ஜே.பி. ஆளும் மாநில அரசுகள் அமல்படுத்துவதை இந்த ஒன்றிய அரசு வேடிக்கை பார்க்கிறது.

### மதச்சார்பற்ற முகத்தை சிதைக்கும் பா.ஜ.க.!

இந்தியாவின் மதச்சார்பற்ற முகத்தைச் சிதைக்கும் வகையில் இந்து ராஷ்டிரம் என்ற சொல்லை பல்வேறு வழிகளில் திணிக்க இந்த அரசு முயல்கிறது. இதற்காக கல்வி மற்றும் வரலாறு சம்பந்தப்பட்ட விஷயங்களில் தவறான தகவல்களை இந்த அரசு திணிக்க முயல்வதாகவும் விமர்சனங்கள் எழுந்துள்ளன. இவை அனைத்தையும் மக்கள் கவனித்துக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

எனது உரையை முடிக்கும் முன்பாக, இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக வள்ளுவர் எழுதியதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

**'நாடொறும் நாடி முறை செய்யா மன்னவன்**
**நாடொறும் நாடு கெடும்'**

அதாவது, தினமும் தன் ஆட்சியை ஆராய்ந்து, நீதியுடன் ஆளாத அரசனின் நாடு நாள்தோறும் மெல்ல மெல்ல அழியும் என வள்ளுவர் கூறுகிறார். அதேபோல வரிக்கு மேல் வரி விதிக்கும் அரசன், கொள்ளையடிப்பவனுக்குச் சமமானவன் என்று வள்ளுவர் சொல்லுகிறார்.

ஆட்சியாளர்களுக்கு பொதுமக்களின் மீது பரிவும் கருணையும் இல்லையெனில் வளம் மிகுந்த நாடும் பயனில்லாமல் போகும். நல்ல அரசு அமையாத நாட்டில் எல்லா வளமும் இருந்தும் எந்தப் பயனும் இல்லை என்பதை இந்த அரசு உணர வேண்டும். வள்ளுவரின் இந்த வார்த்தைகளை மற்ற எவரையும் விட நமது நிதியமைச்சர் நன்றாகவே அறிவார்.

இந்த அரசின் தவறான கொள்கைகளால் குறிப்பாக பணமதிப்பிழப்பு மற்றும் கோவிட் காலங்களில் மக்கள் நீண்ட வரிசையில் தெருக்களில் நிற்பது பி.ஜே.பி. ஆட்சியில் நிரந்தரக் காட்சியாக இருக்கிறது.

இதன் தொடர்ச்சியாக இப்போது, சமையல் எரிவாயுக்காக மக்கள் தெருக்களில் போராடுகிறார்கள். இது தான் இந்த அரசின் உச்சபட்ச சாதனை என்பதை வேதனையோடு சொல்லி எனது உரையை முடிக்கிறேன்.

இவ்வாறு டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு பேசினார்.

---

# டெல்லி Ai மாநாடு குளறுபடிகள் குறித்து - ஒன்றிய அரசு மழுப்பல் பதில்கள்!

## இந்தியாவிற்கு அவமானத்தை தேடித்தந்த ஒன்றிய அரசிற்கு – கே.இ.பிரகாஷ் எம்.பி. கண்டனம்!

புதுடெல்லி, மார்ச்.20-

டெல்லியில் நடைபெற்ற *'India Ai Impact Summit'* நிகழ்வில் அரங்கேற்றப்பட்ட நிர்வாகச் சீர்கேடுகள் குறித்து, நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசிடம் கேள்வி எழுப்பினேன். நம் நாட்டை நோக்கி பலர் நகைக்க காரணமாக இருந்த 'ரோபோ நாய்' காட்சிப்படுத்தல் உள்ளிட்ட குளறுபடிகள் குறித்தும், எதிர்காலத்தில் இதுபோன்ற அவமானகரமான செயல்களைத் தவிர்க்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் விவரங்களை ஈரோடு கே.இ.பிரகாஷ் கேட்டிருந்தார்.

இதற்கு ஒன்றிய அரசு அளித்திருக்கும் பதில்கள், இந்த மாநாட்டை அப்பட்டமாக புனிதப் படுத்துவது போலவும், குளறுபடிகளுக்கு பொறுப்பேற்பதை தட்டிக்கழித்து தனக்கு தானே பாராட்டு பத்திரம் வாசிக்கும் விதத்திலும் அமைந்துள்ளது.



இதன் மூலம், இந்த ஒன்றிய அரசு நடத்துவது ஜனநாயக ஆட்சியா அல்லது தனது காதுகளில் பாராட்டு மட்டுமே விழ வேண்டும் என்று குறைகளை மூடிமறைக்கும் சர்வாதிகார ஆட்சியா என்ற சந்தேகம் எழுகிறது.

1. சீனத் தயாரிப்பிற்கு இந்தியத் தயாரிப்பு என முலாம் கொஞ்சமும் பொறுப்பேற்கும் தன்மை இல்லை

இந்த மாநாட்டில் கல்கோட்டியாஸ் பல்கலைக்கழகம் சார்பில் 'ஓரியன்' என்ற ரோபோ நாய் காட்சிப்படுத்தப்பட்டது. இது இந்தியாவிலேயே உருவாக்கப்பட்ட 'சுதேசி கண்டுபிடிப்பு' என்று தம்பட்டம் அடிக்கப்பட்டது. ஆனால், சமூக வலைத்தளங்கள் மற்றும் தொழில்நுட்ப வல்லுநர்கள் ஆய்வில், அது சீனாவைச் சேர்ந்த *'Unitree Go2'* என்ற நிறுவனத்திடம் இருந்து விலைக்கு வாங்கப்பட்ட பொருள் என்று அம்பலமானது.

இந்த சிறுமையான செயல் உலக நாடுகளின் முன்னிலையில் ஒவ்வொரு இந்தியரையும் வெட்கித் தலைகுனியச் செய்திருக்கிறது. மேலும், ஒன்றிய அரசு மெனக்கெட்டு விளம்பரப் படுத்தும் 'மேக் இன் இந்தியா' திட்டத்தின் பரிதாபமான தோல்வியையும் வெளிப்படுத்தியுள்ளது. ஆனால், ஒன்றிய அரசிற்கு அதுபற்றி எந்த கவலையும் இருப்பதாக பதிலில் தெரியவில்லை. 2. கூட்ட நெரிசல், மின்வெட்டு, இணையம் துண்டிப்பு என பல குளறுபடிகள் இதுவரை உரிய நடவடிக்கைகள் இல்லை

இந்த மாநாடு முதல் நாளில் இருந்தே சர்ச்சைகள் மற்றும் குளறுபடிகளின் ஊற்றாக இருந்தது. உலக நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதை ஒரு முக்கிய நோக்கமாக கொண்ட இதில், எத்தகையவர்கள், என்ன எண்ணிக்கையில் பங்கெடுக்க வேண்டும் என்பதை நன்கு திட்டமிட்டு செயல்படுத்தியிருக்க வேண்டும். ஆனால், *Expression of Interest* முறையில், யார் வேண்டுமானாலும் வரலாம் என்று வாசலை திறந்துவிட்டது ஒன்றிய அரசு. விளைவு, கடுமையான கூட்ட நெரிசல், அவதி, அவப்பெயர்.

மேலும், இந்த மாநாட்டிற்கு போதுமான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்படவில்லை. அடிப்படை வசதிகளிலும் நிறைய சிக்கல்கள். தொடர்ச்சியான மின்வெட்டு, இணையம் துண்டிப்பு என அதிலும் பல்வேறு தொழில்நுட்ப கோளாறுகள். ஒன்றிய அரசு மாநாட்டில் அமைத்திருந்த *'War Room'* எதையும் ஒழுங்காக முறைப்படுத்தாமல் *'Waste Room'* ஆக திகழ்ந்து செய்திகளில் புகழ்பெற்றது.

*'India AI Mission'* திட்டத்திற்கு 10,371 கோடி ரூபாய் என்ற மிகப்பெரிய தொகை ஒதுக்கப்பட்டும், இப்படியான சராசரிக்கும் குறைவான மாநாட்டையே ஒன்றிய அரசு நடத்தி முடித்தது.

3. மாநாட்டின் சாதனைகளென்று எதுவுமில்லை, எல்லாம் சோதனைகள் தான்!

இந்த மாநாடு மிகப் பெரிய சாதனை என்றும், இதன் மூலம் 250 பில்லியன் டாலர் முதலீடு ஈர்க்கப்பட்டுள்ளது என்றும் ஒன்றிய அரசு கூறியுள்ளது. உண்மையில், இத்தனை குளறுபடி களையும், நாட்டிற்கு அவமானத்தையும் அனுமதித்த இந்த மாநாட்டை 'சாதனை' எனச் சொல்ல, அடிப்படையான கூச்ச மேனும் ஏற்பட வேண்டும். ஆனால், ஒன்றிய அரசிற்கு அப்படியொன்று இல்லை என்பது பலமுறை தெளிவாகி விட்டது.

இந்த மாநாட்டின் சாதனையாக ஒன்றிய அரசு குறிப்பிடும் முதலீட்டு எண்களையெல்லாம் எவரும் இங்கு நம்பத் தயாராக இல்லை. இதுவே உண்மை. சமூக வலைதளங்கள் முதல் அத்தனை இடங்களிலும் மக்கள் இவர்களை விமர்சிப்பது மட்டுமே நடக்கிறது. மேலும், இந்த மாநாட்டில் சில தனியார் நிறுவனங்களின் *AI* மாடல்கள் காட்சிப்படுத்தப்பட்டதை சாதனையோடு சேர்ப்பதெல்லாம், தொழில்நுட்ப சிந்தனையில் ஒன்றிய அரசிடம் உள்ள தரக்குறைபாட்டையே காட்டுகிறது.

ஒட்டுமொத்தமாக, *'India AI Impact Summit'* என்ற மாநாடு, ஒன்றிய அரசின் நிர்வாகத் திறமையின்மைக்கும், விளம்பர மோகத்திற்கும், இந்தியா நற்பெயர் பெற்று விடக்கூடாது என்ற அவர்களின் தீய எண்ணத்திற்கும் சான்று. இதை மக்கள் தெள்ளத்தெளிவாக உணர்ந்திருப்பது தான், இந்த மாநாட்டின் ஒரே சாதனை!

இவ்வாறு கே.இ.பிரகாஷ் எம்.பி. தெரிவித்துள்ளார்.



பத்திரிக்கையாளர்களின் நலன் சார்ந்த தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பு அரசாணைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில், திருவாரூர் பிரஸ் கிளப் சார்பில் மூத்த பத்திரிக்கையாளர் இமயம் ஜெயராமன் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணனைச் சந்தித்து முதல்வருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

---

# உதயசூரியன் போல் எழுவாய்!



**கொ**ல்லி மலைத்தேன்
அமுதம் குழைத்துச்
சொல்லில் வடிப்பவனே!.. முப்பால்
சுவைத்துக் குடிப்பவனே!
வில்லின் கணைபோல்
வெற்றி இலக்கைச்
சொல்லி அடிப்பவனே!.. வாகை
சூடி முடிப்பவனே!

புல்லினத் தாரைப்
பொறாமை மனிதரை
எள்ளி நடப்பவனே!.. தடைகள்
எளிதில் கடப்பவனே!
தில்லியின் தேசிய
விருதுகள் அனைத்தும்
அள்ளிக் குவித்தவனே!.. தனிஓர்
ஆற்றல் மிகுத்தவனே!

ஈடு படும்தன்
இலக்கியப் பணியில்
பாடிச் சுழன்றவனே!.. பூமிப்
பரப்பை அளந்தவனே!
காடு மலைசூழ்
“கருவாச் சிக்கும்”
காவியம் புனைந்தவனே!.. கள்ளிக்
காட்டில் விளைந்தவனே!

நீடு நெடும்புகழ்ச்
சிகரம் ஏறி
நின்று நிமிர்ந்தவனே!.. தமிழர்
நெஞ்சம் கவர்ந்தவனே!
பீடு மிகுசெந்
தமிழன் னைக்கோர்
பெருமை கொணர்ந்தவனே!. ‘ஞான
பீடம்’ அமர்ந்தவனே!

“அங்கம் மாள்”தாய்க்
கருப்பைக் குள்ளே
அலையாய் புரண்டவனே!.. புதிய
அறிவாய் திரண்டவனே!
சிங்கம் “இராம
சாமி”யின் வடிவில்
சிலிர்த்துப் பிறந்தவனே!..தன்னைச்
செதுக்கிச் சிறந்தவனே!

மங்காத கருப்பு
வைரமே! எங்கள்
மானத் தமிழ்மகனே!.. வைகை
மண்ணின் அணிகலனே!
வங்கக் கடல்போல்
வழங்கித் தமிழை
முழங்கும் நாயகனே!.. கொற்கை
முத்துப் போன்றவனே!

வீழ்த்த நினைப்போர்
விமர்ச னங்களை
வீதியில் போடுகின்றாய்!..இன்னும்
வீரியம் கூடுகின்றாய்!
காழ்ப்பை உமிழும்
நாக்குக ளுக்கும்
நலமே பாடுகின்றாய்!..ஜீவ
நதியாய் ஓடுகின்றாய்!

வாழ்த்திடக் “கலைஞர்”
இல்லை யே!என
வருந்தி வாடுகின்றாய்!..பெற்றோர்
மடிகளைத் தேடுகின்றாய்!
சூழ்ச்சிகள் தோற்கும்!
தொடர்ந்து படைப்புகள்
சுயமாய் நீதருவாய்!.. உதய
சூரியன் போல்எழுவாய்!

அன்றொரு நாள்,பொன்
மாலைப் பொழுதில்
அடிகள் எடுத்துவைத்தாய்!..
திரையில்
அழகின் சிரிப்புவைத்தாய்!
என்றும் வாழும்
கண்ண தாசனின்
இடத்தில் கவனம்வைத்தாய்!.. புதிய
தடத்தில் பயணம்வைத்தாய்!

ஒன்று போலவே
ஒன்றெதற் கென்றே
உனக்கோர் நடைவகுத்தாய்!..
தனக்கே
உரிய இடம்பிடித்தாய்!
வென்று காட்டுவாய்!
விரைவில் உலக
விருதுகள் நீபெறுவாய்!..திசைகளின்
விழாவில் உலாவருவாய்!



**கவிச்சுடர்**
**கவிதைப்பித்தன்**



திருப்பூர் மத்திய மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் து.கோபிநாத், மாநகர மாணவர் அணி அமைப்பாளர் செ.திலகராஜ், எஸ்.மகேஷ்குமார் ஏற்பாட்டில் மாற்றுக்கட்சிகளைச் சார்ந்த 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் மற்றும் இளைஞர்கள் மாவட்டக் கழகச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர். இதில் தெற்கு மாநகரக் கழகச் செயலாளர் டி.கே.டி.மு. நாகராசன், பகுதிக் கழக பொறுப்பாளர் க.ஈஸ்வரமூர்த்தி, வட்டக் கழகச் செயலாளர்கள் பர்னிச்சர் செந்தில், ராஜேந்திரன், திருநாவுக்கரசு உள்பட மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக சார்பு அணிகளின் அமைப்பாளர்கள். துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.